**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 152 /2016 |
| Deposition of witness | | PW- 2 /LW- 3 |
| Name | | திரு. பாலமுருகன் |
| Father’s/Husband Name | | திரு. நடராஜன் |
| Village | | நெய்வேலி |
| Taluk | | திருவோணம் |
| Age | | 43/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 14th day of November 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற முதல்நிலை காவலர் 1375 திரு.மனோபாரதி என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருவோணம் தாலுக்கா நெய்வேலி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பிளக்ஸ் போர்டு கடை வைத்துள்ளேன். அ.சா.1 எனது சகோதரர். ப.சா.2 நடராஜன் எனது அப்பா. தற்போது அவர் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார். கடந்த 20.09.2015 காலை 10.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் சுமார் 50,60 நபர்கள் விநாயகர் சிலையை கொண்டு சென்றார்கள். என் வீட்டிற்கு எதிரே ஊர்வலத்தை நிறுத்தி மிகவும் சத்தமாக செல்லத்துரை மற்றும் சுதாகர் டிரம் செட் அடித்து வெடி வெடித்தும் செயல்களில் ஈடுபட்டார்கள். நான் வீட்டிற்கு முன்னால் ஏன் வெடி வெடித்து சத்தம் போடுகிறீர்கள் என்று கேட்டவுடன் சென்றுவிட்டார்கள். இந்த சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு என் அண்ணன் ரெங்கராஜ் கறம்பக்குடியிலிருந்து மதியம் வீட்டிற்கு சாப்பிட வரும்போது சுதாகர் வீட்டு வாசலில் வைத்து செல்லதுரை,

சுதாகர், தேவேந்திரன், சுப்பையா, சரவணன் ஆகியோர் ரீப்பர் கட்டை மற்றும் இரும்பு பைப் , டியூப் லைட்டால் எனது அண்ணனை அடித்து உதைத்தார்கள்.

சத்தம் கேட்டு நானும் எனது அப்பாவும் சம்பவ இடத்திற்கு சென்றோம். எனது வீட்டிலிருந்து சம்பவ இடம் சுமார் 100 மீ தூரம் இருக்கும். நாங்கள் செல்லும்போது எனது அண்ணனை எதிரிகள் அடித்துக்கொண்டு இருந்தார்கள். என் அண்ணனுக்கு வலது கையில் முட்டியின் பின்புறம் எலும்பு முறிவு ஏற்பட்டது. மற்ற இடங்களில் சிறிய காயம் ஏற்பட்டு இருந்தது. சம்பவ இடத்தில் எங்களை தவிர நிறைய நபர்கள் இருந்தார்கள். என் அண்ணனை பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்பு 1 மாதங்கள் தனியார் மற்றும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிகளுக்கும் என்ன முன்விரோதம் உள்ளதா என்றால் உள்ளது, எங்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள புளியமரம் வெட்டுவது தொடர்பாக பிரச்சனை இருந்தது. சம்பவ இடத்திலிருந்த 50, 60 நபர்கள் பெயரை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலிசார் என்னை எங்கே எப்போது விசாரித்தார்கள் என்றால் தேதி ஞாபகம் இல்லை, இரண்டு நாட்கள் கழித்து என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். என்னை வீட்டில் வைத்து ஏட்டு தான் விசாரித்தார்கள். என்னிடம் ஆயுதத்தை காட்டி போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஞாபகம் இல்லை. என் அண்ணன் கறம்பக்குடியில் நகை கடை வைத்துள்ளார். கறம்பக்குடி புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுக்கா ஆகும். எங்கள் வீட்டிற்கும் என் அண்ணனின் கடைக்கும் சுமார் 6 கி.மீ இருக்கும். பைக்கில் கடைக்கு போக வர எவ்வளவு நேரம் ஆகும் என்றால்
சுமார் 15 நிமிடம் ஆகும்.

விநாயகர் ஊர்வலத்தில் யார் தலைவராக இருந்தது என்றால் என் அண்ணன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், நாங்கள் மறுபடியும் தலைவராக வேண்டும் என்பதற்காகவும், ரெங்கராஜன் என் அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாகவும், எதிரிகளுக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்களுக்கு பங்காளிகள் ஆவார்கள். என் அண்ணன் பைக்கிலிருந்து கீழே விழுந்ததை வைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், எந்தவித ஆயுதத்தை பயன்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை